**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 09** **நாள் : 06.01.2026**

**மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் தலைமையில், மாண்புமிகு மேயர் அவர்களின் நிதிநிலை அறிக்கை அறிவிப்புகளின் செயலாக்கம் குறித்து ஆய்வுக்கூட்டம் இன்று நடைபெற்றது.**

மாண்புமிகு மேயர் அவர்களின் நிதிநிலை அறிக்கை அறிவிப்புகளின் செயலாக்கம் குறித்து ஆய்வுக்கூட்டம் மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் தலைமையில் இன்று (06.01.2026) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாண்புமிகு மேயர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் கல்வித்துறை, பொதுசுகாதாரத்துறை, மருத்துவ சேவைகள் துறை, இயந்திரப் பொறியியல் துறை, வருவாய்த்துறை, பேருந்து சாலைகள் துறை, பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல்கள் துறை, திடக்கழிவு மேலாண்மைத் துறை, சிறப்புத் திட்டங்கள் துறை, கட்டடத் துறை, மின்துறை, தகவல் தொழில்நுட்பம், ஒருங்கிணைந்த கட்டளை மற்றும் கட்டுப்பாட்டு மையம், மன்றத்துறை, நிதித்துறை உள்ளிட்ட துறைகளில் அறிவிக்கப்பட்ட 62 அறிவிப்புகளின் செயலாக்கம் குறித்து விரிவாகக் கேட்டறிந்து, நடைபெற்று வரும் பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., இணை ஆணையாளர் (கல்வி) திருமதி க. கற்பகம், இ.ஆ.ப., துணை ஆணையாளர்கள் திரு.வி.சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., (பணிகள்), திரு.ம.பிரதிவிராஜ், இ.ஆ.ப., (வருவாய் (ம) நிதி) மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**